பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
12 03 2025 **WEDNESDAY** 12 40 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள மக்களின் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் முன்னெடுத்த தண்டி யாத்திரை சுயசார்பு மற்றும் சுதந்திர வேட்கையை ஏற்படுத்தியதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. மாறி வரும் உலக சூழலுக்கு ஏற்ப இந்திய விமானப்படை நவீனமயமாக்கப்பட்டு வருவதாக தலைமை தளபதி ஏர்சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங் கூறியுள்ளார்.

4. கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும், எஃகு மற்றும் அலுமினியத்திற்கான இறக்குமதி வரி, 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக உயர்த்தப்படுவதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரமப் அறிவித்துள்ளார்.

5. சிறப்பு குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<

பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள மக்களின் மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்

சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், மாணவர்களிடையே தேசப்பற்றை வளர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மாணவ சமுதாயத்தினர் நேர்மறையான கொள்கைகளை கடைபிடிக்க வேண்டும் என்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில், மாறிவரும் தொழில்நுட்பங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு சாதனைகளையும் குடியரசுத்தலைவர் பாராட்டினார்.

>>>>>><<<<<

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் முன்னெடுத்த தண்டி யாத்திரை சுயசார்பு மற்றும் சுதந்திர வேட்கையை மக்களிடையே ஏற்டுத்தும் பேரியக்கமாக அமைந்தது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த தண்டி யாத்திரையில் பங்கேற்ற அனைத்து சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் தமது வீரவணக்கத்தை செலுத்துவதாக கூறியுள்ளார்.

அவர்களின் துணிச்சல், தியாகம் மற்றும் காந்தியடிகளின் சத்தியாக்கிரகம் மற்றும் அகிம்சை வழியில் நடைபெற்ற இந்த தண்டி யாத்திரை எதிர்கால சந்ததியினர் என்றும் நினைவுகூரத்தக்க வகையில் அமைந்துள்ளதாகவும் பிரதமர் அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

தேசிய கல்விக் கொள்கையில் ஹிந்தி திணிக்கப்படுவதாக தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மீண்டும் பொய்யான தகவலை கூறி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தேசிய கல்விக்கொள்கையில் எந்தவொரு இடத்திலும் ஹிந்தி திணிக்கப்படவில்லை என்றும் அந்தந்த மாநிலங்களின் தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்ப்டிருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெளிவுபடுத்தியிருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன் பிறகும், ஹிந்தி திணிக்கப்படுவதாக எந்த அடிப்படையில் தமிழக முதலமைச்சர் கூறுகிறார் என கேள்வி எழுப்பியுள்ள திரு. எல். முருகன், மீண்டும் மீண்டும் கூறுவதால் ஒரு பொய் உண்மையாகிவிடாது என்றும் தெரிவித்துள்ளார்.

ஆட்சியும் அதிகாரமும் நிரந்தரமில்லை என்பதை மக்கள் வெகுவிரைவில் உணர்த்துவார்கள் என்றும் திரு. எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<

தேசிய கல்விக்கொள்கையில் மாநில மொழிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. தினேஷ் சர்மா கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தை ஆளும் திமுக அரசு மக்களுக்கான திட்டங்களை முறையாக நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டினார்.

மக்களை திசை திருப்புவதற்காகவே மொழி பிரச்சினையை அந்த கட்சி கையில் எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தைப் பொறுத்தவரை திமுக தனது செல்வாக்கை இழந்து வருவதாகவும் திரு. தினேஷ் சர்மா கூறினார்.

>>>>>><<<<<

மடஹாஸ்கர் தேசிய நாடாளுமன்ற அவைத்தலைவர் திரு. **Justin Tokely** தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர் குழு இன்று இந்தியா வந்துள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கைகளை பார்வையிட வந்துள்ள அவர்களை மாநிலங்களவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஸ் வரவேற்றார்.

இந்தியாவுக்கும் மடஹாஸ்கருக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் விதமாக அந்நாட்டு நாடாளுமன்ற குழுவினரின் வருகை அமையும் என்றும் திரு. ஹரிவன்ஸ் கூறியுள்ளார்.

>>>>>><<<<<

தென்கிழக்கு ஆசியாவில் இணையதள குற்றங்கள் தொடர்பான புலனாய்வு மையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள 266 இந்தியர்களை பத்திரமாக தாயகம் அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சமூகவலைதளப் பதிவில் இதனை தெரிவித்துள்ள வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், மியான்மர், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகள், இவர்களை இந்தியா அழைத்து வர உதவிகரமாக இருந்ததாகவும் கூறியுள்ளார்.

அந்நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களை அணுகியபோது, போதிய ஒத்துழைப்பையும், ஆதரவையும் அவர்கள் அளித்ததாகவும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால்தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

மாறி வரும் உலக சூழலில் நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில், விமானப்படை நவீனப்படுத்தப்பட்டு வருவதாக அதன் தலைமை தளபதி ஏர்சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் வெலிங்டனில் உள்ள ராணுவ பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் இளம் அதிகாரிகளிடையே உரையாற்றிய அவர், புதிதாக உருவாகும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான உத்திகளை வகுக்குமாறு இளம் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

விமானப்படை வீரர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஏர்சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங், போர் ஆயத்த நிலையை மேம்படுத்த முப்படைகளும் கூட்டாக செயல்படுமாறும் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<

பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் மூலம், நாட்டு மக்கள் அனைவருக்கும் தரமான மருந்துகள் குறைந்த விலையில் கிடைப்பதை மத்திய அரசு உறுதி செய்துள்ளது.

இந்த மருந்தகங்கள் மூலம், தங்களது மருத்துவச் செலவு பெருமளவு குறைந்துள்ளதாக கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 46 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் உள்ள **Aknoor** பகுதியில் இந்திய ராணுவத்தின் சார்பில் 20 கிராமப்புற மாணவிகளுக்கு ஆப்பரேசன் சத்பாவனா என்ற 45 நாள் அடிப்படை கணினி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**Sunail** என்ற கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் இந்த மாணவிகள், தொழில்நுட்ப ரீதியாக தன்னிறைவு பெறும் வகையில் இந்தப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி தமக்கு மிகுந்த பயனுள்ளதாக அமைந்திருந்ததாகவும், அரிய வாய்ப்பை அளித்த இந்திய ராணுவத்திற்கு தங்களது வணக்கத்தை செலுத்துவதாகவும் மாணவிகள் பெருமிதத்துடன் தெரிவித்தனர்.

பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய குடும்பங்களிலிருந்து வந்துள்ள தங்களுக்கு இந்தப் பயிற்சியும், சான்றிதழும் பேருதவியாக இருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனார்.

>>>>>><<<<<

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும், எஃகு மற்றும் அலுமினியத்திற்கான வரியை அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் உயர்த்தியுள்ளார்.

இதுவரை 25 சதவீதமாக இருந்த இறக்குமதி வரி, தற்போது 50 சதவீதமாக உயர்த்தப்படுவதாக அவர் அறிவித்துள்ளார்.

>>>>>><<<<<

அமெரிக்காவின் தேசிய புலனாய்வு துறை இயக்குநர் திருமதி. **Tulsi Gabbard** இந்தியா வரவுள்ளதாக கூறியுள்ளார்.

இந்தோ பசிபிக் மண்டல நாடுகள் பயணத்தின் ஒரு பகுதியாக பிரதமர் திரு. நரேந்திர மோடியை தாம் சந்திக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவும் அமெரிக்காவும் புலனாய்வு தகவல்களை பகிர்ந்து கொள்வதை மேம்படுத்துவது குறித்து அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்புடன், பிரதமர் திரு. நரேந்திர மோடி அண்மையில் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில் தமது இந்தியப் பயணம் அமையவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அமைதி மற்றும் சுதந்திரம் தொடர்பான இலக்குகளை எட்டுவதற்கு அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் மேற்கொண்டு வரும் முயற்சிகளை இந்தோ-பசிபிக் நாடுகளுடன் தாம் பகிர்ந்து கொள்ளப்போவதாக திருமதி. **Tulsi Gabbard** தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

கிரீன்லாந்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் ஜனநாயக கட்சி வெற்றிபெற்று ஆட்சியமைக்கவுள்ளது.

வர்த்தக அமைப்புகள் ஆதரவுடனான இந்த கட்சி, தேர்தலில் 29 புள்ளி ஒன்பது சதவீத வாக்குகளை பெற்றுள்ளது.

கிரீன்லாந்தில் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், **Siumut Inuit** கூட்டணி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ளது.

>>>>>><<<<<

சிறப்பு குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இந்தியா 2 தங்கம், 2 வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

இத்தாலியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் பனிச்சறுக்கு பிரிவில் இந்தியாவின் சமீர் யாதவ் மற்றும் **Bharti** ஆகியோர் தங்கப்பதக்கங்களை வென்றனர்.

அதேபிரிவில், ஹேம்சந்த் மற்றும் ஹர்சிதா ஆகியோரும் வெள்ளிப்பதக்கங்களை வென்றனர்.

>>>>>><<<<<

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ரி - ஸ்வீடனின் **Andre Goran Sson** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது

இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 5-7, 10-5 என்ற செட்கணக்கில் ஃபின்லாந்தின் **Harry Heliovaara -** இங்கிலாந்தின் **Henry Patten** இணையை வென்றது.

>>>>>><<<<<

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஹைதராபாத் அணி – கேரளா அணியை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<

ஆசிய மகளிர் கபடி சாம்பியன் போட்டியில் பட்டம் வென்ற இந்திய அணியினர், புதுதில்லியில் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

>>>>>>END<<<<<